# கிளாலியிலிருந்து படை பின்வாங்கியது பற்றி நாடாளுமன்றத்தில் அரசு பதில் தர மறுப்பு!

(கொழும்பு)

பெருமளவு இழப்புகளுடன் கிளாலியை கைப்பற்றிய படையினர் மீண்டும் ஏன் ஆனையிறவு முகாமுக்குத்திரும்பினர் என நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில்தர முடியாது என அரசு அதனை நிராகரித்து விட்டது.

கொழும்புமாவட்ட எம்.பி. நிமால்சிறிபாலடி சில்வா நேற்று இது சம்பந்தமான கேள்வி ஒன்றை நாடாளுமன்றத்தில் எழுப்பினர். அவர் தமது கேள்வியில் தெரிவித்திருந்ததாவது:-

பெருமளவு படையினரின் உயிரிழப்புகளுடனும் 450க்கு

(3-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 20 இதழ் 231

யாழ்ப்பாணம் புதன்கிழமை 6 – 10 1993


## 12வேங்கைகள் நினைவுதினம் உணர்வுபூர்வ அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச்சதியால் பலாலியில் தம் இன்னுயிர்களை ஈய்ந்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் ஆறும் ஆண்டு நினைவு தினத்தை தமிழீழ மக்கள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

பன்னிரு வேங்கைகளின் நினைவாக எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன

விடுதலைப் புலிகளின் முகாம்

(3-ஆம் பக்கம் பார்க்க)

★ இன அழிப்பு யுத்தம் தொடங்கிவிட்டது

# ஆயுதப் போரில் இணையும்படி இளைஞர்க்கு புலிகள் அழைப்பு

## படையெடுப்புக்களை முறியடிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

**இன அழிப்புப் போர் தொடங்கிவிட்டது. எதிரியை எதிர்கொண்டு எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதற்கு ஆயுதப்போரில் இணையும்படி தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அவசர அழைப்பு விடுத்துள்ளனர்.**

சிறிலங்கா அரச படையினர் தமிழீழ மக்கள்மீது பேரழிவை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டுவரும் பாரிய ராணுவ தாக்குதல் தொடர்பாக தமிழீழ மக்களை விழிப்புறச்செய்யும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் துறை நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இன்று தமிழ் மக்கள் ஒரு நெருக்கடியான சூழ் நிலையைச் சந்தித்துள்ளனர். இன அழிப்பையே நோக்காகக் கொண்ட சிங்களப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஒரு தாக்குதலுக்கு இராணுவம் முயற்சிக்கலாம்

(லண்டன்)

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாநாட்டை ராணுவம் கைப்பற்ற முயற்சிக்குமானால் பெருமளவு சாதாரண பொதுமக்கள் பலியாக நேரும் என்பதை கடந்த வாரம் ராணுவம் மேற்கொண்ட 'யாழ்தேவி' ராணுவ நடவடிக்கை புலப்படுத்தியிருப்பதாக பி.பி.சி. தெரிவித்தது.

அச்செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த வாரம் ராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ராணுவத்துக்கும் பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக கொழும்பில் 1,500 தாய்மார் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன் தினம் 1500 க்கு மேற்பட்ட தாய்மார்கள் அரசுக்கு எதிராக அமைதி செய்யும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ராணுவ நடவடிக்கைகளின் போது தமது பிள்ளைகளை இழந்த, அல்லது சிறைபிடிக்கப்பட்ட அல்லது காணமற் போன பிள்ளைகளின் தாய்மார்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

தற்போது சிறையிலிருக்கும் 16 ஆயிரம் இளைஞர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் அல்

(4-ஆம் பக்கம்பார்க்க)

## ராணுவபலத்தைக் காட்டவே யாழ்தேவி நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்காப் படையினரின் இராணுவப்பலத்தை எடுத்துக் காட்டும் விதமாகவே யாழ் தேவி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடாளுமன்ற குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

நல்லெண்ண விஜயம் ஒன்றில் இங்கு வந்துள்ள இந்தத் தூதுக்குழு நேற்று நாடாளு

(4-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி கொலைத் திட்டம் விடுதலைப் புலிகள் மறுப்பு

(லண்டன்)

தமிழக தி.மு.க தலைவர் கருணாநிதியை கொலைசெய்யும் திட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பு கொண்டுள்ளதாக கூறப்படுவதை அவ்வியக்கம் வன்மையாக மறுத்துள்ளது.

தி.மு.க.விற்குள் இருக்கும் உட்பூசலுக்கு வசதியாக புலிகளை பலிஆளாக்குகிறார்கள் என்றும் அவ்வியக்க குறிப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (வி)

## செப்ரிசிமியா நோய்க்கு நேற்று இருவர் மரணம்

(திருநெல்வேலி)

யாழ் போதனா வைத்திய சாலையில்செப்ரிசிமியாநோய்க்கு உட்பட்ட இருவர் சிகிச்சை பெற்றபோது நேற்று மரணமடைந்தனர்.

செப்ரிசிமியா நோய்க்குட்பட்டு இறந்தவரில் ஒருவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த

(3-ம்பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு 2,446 கோடி ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

1994ம் ஆண்டுக்கெனப் பாதுகாப்பு அமைச்சின் செலவினங்களுக்காக 2,446 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் செலவினங்களுக்காக அடுத்த வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட ஆகக் கூடிய தொகை இதுவாகும்.

அடுத்த ஜனவரி மாதம் ஆரம்பமாகும் நிதியாண்டில், அரசுக்கான மொத்தச் செலவினம் 13 317 கோடி ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது.

இதில் 6,598 கோடி ரூபாவை உள்ளூரிலும், வெளிநாடுகளில் இருந்தும் கடனைப்

(3ம் பக்கம் பார்க்க

## விளம்பரம்

### "சுவடுகள்" நாவல் பதிப்புரையில்

இயல்வாணன் எழுதிய "சுவடுகள்" நாவலைப் படித்ததும் ஒரு புதிய பரம்பரை எழுத்தாளர் முளை விடுகிறார் என்ற உடட்டுக்குத் தெரியாமல் உச்சரித்துக்கொண்டேன். மீரா. (சி-506)

### இலக்கியக் களத்தில் "சுவடுகள்"

இந்த நாவலில்...மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது......சூரியனைத் தேடி ஒரு சூரியப்பூ மலர்கிறது...... (சி-507)

### பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்"

1991ஆம், 1992ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்" விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், ஸ்ரீகாந், கமிலன் புத்தகசாலைகள் - யாழ்ப்பாணம். (சி-508)

### 12- 10- 93-ல் வியாழ மாற்றம்

15- 10-93இல் சனி வக்கிர மாற்றம், 31- 10- 93 இல் செவ்வாய் மாற்றம் (தமிழர்களுக்கு வியாழ சுகம் உண்டு) எல்லா ராசிகளின் பலன்கள் ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. Prof. சத்தியசீலன், கட்டுடை. (சி-509)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், நீரிழிவு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைச்சுரை வியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குற்றம், இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், கருப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-475)

### நுளம்பை அகற்றும் நறும்புகை

இயற்கை அன்னையின் தாவரவுலகில் மருந்துவப் பயன் தரும் வேம்பு அற்புதமானது. அதன் முத்தான விதைகளின் ஆதாரமும் கலந்ததே "நீம் சுகந்தர தூபம்" எவ்வித எதிர்விளைவும் தராததும், மங்களகரமானதும் நீம் சுகந்தர தூபம். ஒரு பக்கற் விலை ரூ. 3/- மட்டுமே; 25 பக்கற்றுகள் கொண்ட ஒரு அட்டை ரூ. 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மிக்கவற்" (சி-3472)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நிற்கும்- வன்னிக்கும் இடையே தற்போது போக்குவரத்துச் சிக்கல் காரணமாக ஏற்பட்டுள்ள தகவற் பரிமாற்றத்தை தடங்கல்களைக் கருத்திற் கொண்டு யாழ். நகரிற்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்புச் சேவை நடைபெற்று வருகின்றது.

இச்சேவைக்கான செயலகங்கள் அருச்சுனா வீதியிலுள்ள ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும் கிளிநொச்சியில் பழைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அண்மையிலும் உள்ள கட்டடத்திலும் மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்குகின்றது.

செயலகங்கள் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும், மாலை 1-30 தொடக்கம் 5 மணி வரையும் இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களை அனுப்புவோர் அதற்கென

# நெருக்கடி கால சேவையில் யாழ்-வன்னி தொடர்பு பிரிவு

உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்தி செய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

சலுகை

பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் சலுகை அடிப்படையிலான செய்திகளாகக்கொள்ளப்படும். குறிப்பிட்ட இடத்தார் பொறுப்பாளர் அல்லது கிராமசேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

15ற்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15-ம், மேலதிகமான சொற்களுக்கும் ரூபா 2-ம் அறவிடப்படும்.

குறிப்பு:

பாரதூரமான நோய்வாய்ப் பட்டிருக்கும், மரண அறிவித்தல் செய்திகளை சாதாரண தகவல்களாக ஏற்றுக் கொள்ள இருப்பினும் மேற்குறிப்பிட்டோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருத்தல் வேண்டும்.

வியாபாரத் தகவல்

தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்கள் இக் குறிப்பிட்ட வகையில் அடங்கும்.

முதற் பத்து சொற்களுக்கும் ரூபா 200. மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15ம் கட்டணமாக அறவிடப்படும்.

வழமையான தகவல்

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத் தகவலிலும் வியாபாரத் தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவலிலும், வியாபாரத் தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாக கொள்ளப்படும்.

முதற் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 100ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

விநியோக வகைகள்

சாதாரண விநியோகம்:

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72மணி நேர இடைவெளிக்குள் அவ்வப் பகுதித் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கையளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும்.

விரைவு விநியோகம்

இது தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியில் "நேரடியாக" விநியோகிக்கப்படும். விரைவு விநியோகத்திற்காகச் சாதாரண கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

குறிப்பு:

1. தெளிவில்லாத முகவரிகள், தகவல் விபரங்கள் என்பவற்றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பவற்றால் விநியோக சேவையினர் பொறுப்பேற்க முடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களிற்காக தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம்.

2. வன்னிப் பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனை நிலை கருமபீடத்தையும் கிளிநொச்சியில் அலுவலகத்தையும் முகவரியாக அமைத்து தகவலை அனுப்பலாம். உரியவர் தன்னை உரிய ஆவணத்தினூடாக அடையாளம் காட்டக் கோரும் பட்சத்தில் தகவல் வழங்கப்படும்.

3. கட்டணங்கள் காசவும் பணமாகவே செலுத்தவேண்டும்.

4. விரைவு விநியோகத்திற்காகத் தகவல்கள் ஒப்படைப்பவர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்படைக்கும்போதே பதில் தகவல் பெற்று அனுப்பப்படும்.


5. தகவல் விநியோகப் படிவத்தினை ரூபா 1 கொடுத்து செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

6. எல்லாத் தகவல்களும் தமிழ் மொழியில் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.

7. தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை காட்டித் தம் அடையாளங்களை உறுதிப்படுத்தவேண்டும்.

பொதுமக்கள் யாவரும் இச் சேவையினைப் பயன்படுத்தி பயன் பெறும் நோக்குடன் இச்செய்தியைப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அறியத் தருகின்றது. (ஐ)

## செய் நன்றி அறிதல்



### அமரர் வை. இரத்தினசபாபதி

மலர்வு: 1941-02-07 உதிர்வு: 1992-09-18

திதி: 06 10 93

"நான் ஒப்புக்காய் சொன்னால் ஒற்றைக் கண்ணால் அழுகிறேன் கண்ணீர் விடுவதானால் உடம்பில் நீர் வற்றும்வரை விட்டாக வேண்டும்"

சென்ற 18-9-92ல் என் வாழ்வில் நடந்த துன்பியல் சம்பவத்தை நினைக்கின்றேன். இவ்வேளை வெறியரால் விடப்பட்ட எறிகணை என் தந்தையின் மார்பைத் துளைத்ததினால் உடன் பிணமானார். தொடர்ந்து நடைபெற்ற அனர்த்தங்களுக்குப் பயந்து மக்கள் ஓட்டம் பிடித்தனர். தந்தையின் உடன் பிறப்புக்கள் கூட பாதுகாப்பிற்காக ஓடினர். என் தந்தைக்கு பல வழிகளிலும் கடன்பட்டோர் நன்றி மறந்து ஓடவும், என் தந்தைக்கு காயம்தான் என்று எண்ணி பரிகாரம் தேட வண்டியுடன் வந்தான் ஒரு சிறுவன். அவனுக்கும், உடற்பல மிக்க என்பிதாவை வான் தாக்குதல்களுக்கு மத்தியில் சுடலைவரை சுமந்து வந்த வீரபத்திர ச. ச. நிலயத்தினர்க்கும், நாவலர் ச. ச. நிலையத்தினர்க்கும், எனனோடுவந்த பெரியோர்க்கும், விடுதலைப் புலிகளுக்கும், என் சகதோழர்களான யாழ். இந்துவின் மாணவர்களுக்கும் நன்றி.

இவர்களின் செயல்களை என்பிதாவின் 1-ம் ஆண்டு திதியில் நினைக்கின்றேன்.

ஏகபுதல்வன்
இ. வைத்திலிங்கம்
யாழ். இந்துவின் மாணவன்

பத்திரகாளி கோவிலடி,
சுளிபுரம்.

(சி-501)

## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

### ஆசிரியர் தின அழைப்பு

எமது கல்லூரி ஆசிரியர்களை யா/வைத்தீஸ்வரா கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் வைத்து இன்று புதன்கிழமை காலை 9-00 மணியளவில் கௌரவிக்கவுள்ளோம்.

இதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச்சபை,
(யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

(ஏ 3475)

வரலாற்று சிறப்பு மிக்க அலம்பிலை - புலோப்பளை வீரச்சமரில் காவியம் படைத்த வீர வேங்கைகளுக்கு

எமது வீர அஞ்சலி

# புங்குடுதீவு - நயினாதீவு

# ப. நோ. கூ. சங்கம்

(ஏ3474)

கொழும்பு புலிகளால் தாக்கப்படலாம் என்பதாலேயே

# கிளாலியிலிருந்து இராணுவம் பின்வாங்கிச் சென்றதாம்!

## படை அதிகாரிகள் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை நடத்துவர் என்பதற்கு அஞ்சியே, பெரும் எடுப்பில் கிளாலியைக் கைப்பற்றிய ராணுவம் பின்பு பின்வாங்கியதென ராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளுக்கு முக்கிய நிலையமாக விளங்கும் கிளாலிப் பகுதியை ராணுவம் கைப்பற்றியதும் பதிலுக்கு கொழும்பில் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்துவர் என்ற அச்சம் ராணுவ தரப்பில் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் செய்திகள் தெரிவித்தன. (கே-வி)

## இன அழிப்பு யுத்தம் தொடங்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு பொதுமக்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், சந்தைகள், வீடுகள் என்று பொதுமக்கள் நிலைகள் மீது கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களையும், எறிகணைகள் மற்றும் பீரங்கிக்குண்டுத் தாக்குதல்களையும் சிங்களப் படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இவ்விமானக் குண்டுத் தாக்குதல்களில் 53 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 98 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பொது மக்களை இலக்காகக் கொண்ட பெரும்போர் ஒன்றை சிங்களப்படைகள் ஆரம்பித்துவிட்டன, என்பதையே கண்மூடித்தனமான இக் குண்டுத்தாக்குதல்கள் கோடிட்டு காட்டுகின்றன.

இதன் ஒரு அங்கமாகவே 'யாழ்தேவி' என்ற பெயரில் சிங்களப்படைகள் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்து கிளாலிப்பகுதியை ஆக்கிரமித்து, பொதுமக்களின் போக்குவரத்தை அடியோடு துண்டிக்கமுயன்றன.

ஆனால் இப்படையெடுப்பில் சிங்களப்படைகள் சந்தித்த பேரிழப்புகள் அதன் நோக்கத்தையே சிதைத்துவிட்டது. அதனால் ஆக்கிரமித்த கிளாலிப்பகுதியை விட்டு பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப்படைத்துறைக்கு ஏற்பட்டது.

இதனால் கிளாலியில் நிரந்தரமாகத் தரித்து நின்று பொதுமக்களின் போக்குவரத்தைத் தடைசெய்து, குடாநாடு மீதான பூரண பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தி, பொது மக்களை துன்புறுத்த நினைத்த சிங்கள அரசின் எண்ணம் கைகூடவில்லை.

இதேபோன்று தான் முன்னரும் குடாநாட்டுடனான தரைப்பாதையை ஆக்கிரமித்த சிங்கள அரசு, தமிழ் மக்கள் மீது விதித்த பொருளாதாரத்தடையை மேலும் இறுக்கி பொது மக்களை துன்புறுத்த விரும்பியது.

எனினும் கிளாலி கடல் பாதையூடாக மக்கள் பயணம் போய் தங்களது வாழ்க்கைப் படகை ஓட்டத்தொடங்கிய போது சிங்கள அரசு தனது கடற்படையை ஏவிவிட்டு இந்த மக்கள் போக்குவரத்தை தடுத்து நிறுத்த முயற்சிசெய்தது.

ஆனால் கடற்புலிகளின் தீவிர செயற்பாடுகளினாலும், துணிகரமான தாக்குதல் முறைகளினாலும் பயணிகளின் படகுப் போக்குவரத்திற்கு பாதுகாப்பு கிடைத்தது இது சிங்களக் கடற்படைக்கு சவாலாகவே அமைந்துவிட்டது.

விளைவு, கிளாலிக் கடல் சிங்களக் கடற்படையினதும், கடற்புலிகளினதும் பிரதான பொருதுகளமாக மாறியது.

பொதுமக்களின் படகுகளை அழிப்பதையே இலக்காகக் கொண்ட சிங்களக் கடற்படைக்கும், பொதுமக்களைப் பாதுகாப்பதையே இலட்சியமாகக்கொண்ட கடற்புலிகளுக்கும் இடையில் தினந்தோறும் கடற் சமர்களும் நடைபெறத் தொடங்கின.

இறுதியில் 25-08-93 அன்று கிளாலிக் கடலில் நடந்த பெரியதொரு சண்டையும், அதன் இறுதியில் நிகழ்ந்த கரும்புலித் தாக்குதல்களும், சிங்களக் கடற்படையைக் கிளாலிக் கடலிலிருந்து தூர விலகியிருக்கச் செய்துவிட்டது.

தனது கடற்படையைக் கொண்டு மக்களின் படகுப் பயணத்தைத் தடுத்து நிறுத்தலாம் என்று நம்பியிருந்த சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு, அது இயலாததென்று புரிந்துவிட்டது.

இந்த நிலையில்தான் பெருமெடுப்பிலான ஆகாயத் தாக்குதல்களின் உதவியுடன், டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் பல்லாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இராணுவத்தையும் பயன்படுத்தி கிளாலியை ஆக்கிரமிக்கச் சிங்களப் படைத்துறை திட்டமிட்டது.

ஆனால் சிங்களப் படைத்துறைத் தலைமை எதிர்பார்த்ததுபோல, அப்படை நகர்த்தல் இலகுவாக அமையவில்லை இதனால் கிளாலியைப் படையினர் கைப்பற்றியிருந்தும், நிரந்தரமாகத் தங்கியிருக்க இயலாது, ஆனையிறவுத் தளத்திற்கே பின்வாங்கிவிட்டனர்.

ஆனாலும் இன்னொரு முனையால் வேறொருபடையெடுப்பை நடத்தச் சிங்களப் படைகள் ஆயத்தம் செய்கின்றன. அதற்காக இருபதாயிரம் துருப்புகள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தவிதமான ஒரு பெரிய படையெடுப்பு, யாழ்ப்பாணக் குடாநாடு மீது நடைபெறுமாக இருந்தால் பொதுமக்களைச் சிங்களப் படையினர் எவ்வாறு வதைப்பர் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

பல்லாயிரக்கணக்கில் இளைஞர்களையும், இளம் பெண்களையும் கொன்றுவிடமுனைவர். காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளையும், சித்திரவதைகளையும் பயன்படுத்தி, எமது இளம் சந்ததியை அழிக்க முனைவர்.

சிங்களவர்களாலேயே மேற்கொள்ளப்பட்ட ஒரு சாதாரண கிளர்ச்சியை ஒடுக்க, அறுபதாயிரம் சிங்கள இளைஞர்-யுவதிகளைக் கொன்று குவித்ததில் பிரதான பாத்திரம் வகித்த சிங்கள வைத்தியரத்னாதான் இப்போது இந்த யாழ். குடாநாடு மீதான படையெடுப்பை நடாத்துகின்றார். அப்படியாயின், அந்த இராணுவ ஜெனரலின் கட்டளையின் கீழ் செயற்படும் சிங்களப் படைகள், தமிழ் இளைஞர் - யுவதிகளை எப்படி வதைப்பர், படுகொலை செய்வர் என்பதை ஊகித்தறிய முடியும்.

இத்திட்டத்தின் படிதான் தென்தமிழீழத்தை ஆக்கிரமித்த சிங்களப்படைகள் அங்கே பெருந்தொகையில் தமிழ்மக்களை கொன்றொழித்து அவர்களது பொருளாதார வளங்களை அழித்தொழித்து தீவிரமான முறையில் தமிழினப்படுகொலையை செய்துள்ளன. அதைத்தான் வடதமிழீழத்திலும் குறிப்பாக யாழ். குடாநாட்டிலும் செய்வதற்கு அரச படைகள் ஆயத்தங்கள் செய்கின்றன.

குடாநாடு சிங்களப் படைகளின் கைகளில் விழுமானால் தென்தமிழீழத்தில் நடந்ததை விட பன்மடங்கு தொகையில் படுகொலைகளையும் பாலியல் வன்முறைகளையும் சித்திரவதைகளையும் சிங்களப்படைகள் மேற்கொள்ளும் என்பது வெளிப்படை.

எனவே அநியாயமாக-அடிமைகளைப்போல சிங்களப் படைகளின் கைகளால் படுகொலை செய்யப்படுவதைவிட ஆயுதமேந்தி சிங்களப்படைகளுக்கு எதிராகப் போராடுவதன்மூலம் எமது இனத்திற்கு வரவிருக்கும் பேராபத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதேவேளை பெரும்படையெடுப்பு ஒன்று நடக்கப் போகின்றதே. நாம் கொல்லப்படப்போகின்றோமே, அழிவுகள் வரப்போகின்றனவே என அச்சத்துடன் மக்கள் முடங்கியிருக்க முனையக் கூடாது. மாறாக ஒரு தற்காப்பு நடவடிக்கைக்காக எம்மை நாமே தயார்படுத்தத் தொடங்கவேண்டும்.

முன்னரைவிட மிகத் தீவிரமாகவும், துணிவாகவும், தியாக சிந்தையுடனும் செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. தம்மையும், தமதுகுடும்பத்தவர்களையும் தத்தம் ஊர்களையும் சிங்களப்படைகளிடமிருந்து பாதுகாக்கவேண்டிய தேவை மக்கள் எல்லோருக்கும் எழுந்துவிட்டது.

இனியும்பேச்சுவார்த்தைகள் என்றும், சமாதானமுயற்சிகள் என்றும் வீண் நம்பிக்கைகளுக்குள் எமது மக்கள் அல்லலுறக் கூடாது. பேச்சும் இல்லை, சமாதான முயற்சிகளும் இல்லை என்று அரசே திட்டவட்டமாக வெளிப்படையாக அறிவித்துவிட்டது. படையெடுப்புகள். இராணுவ அணுகுமுறைகள் மூலமே இனப்பிரச்னையையாள அரசும், படைத்துறை தலைமையும் ஏகோபித்த முடிவை எடுத்துவிட்டன. இந்தக்கடும்போக்கை சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினருமே அங்கீகரித்தும் விட்டனர்.

இந்நிலையில் அமைதிவழி முறையில் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டை கைவிட்டுவிட்டு ஆயுதமேந்திப் போராடி எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதுடன் எமது மண்ணையும் எதிரியின் பிடியில் இருந்து விடுவிக்கப் பாடுபடுவோம்.

இந்த உன்னத நோக்கத்திற்காக ஆயுதப்போரில் இணையும்படி எமது இளைஞர்களையும்— இளம் பெண்களையும் நாம் அன்புடன் அழைக்கின்றோம். இது ஒரு அவசரமான அழைப்பு.

எமது தாய்த்திருநாட்டின் இந்த அறைகூவலுக்கு உடனடியாகவே செவிசாய்க்கும்படி இந்த மண்ணின் மைந்தர்களை வேண்டிக்கொள்கின்றோம். தமிழீழ மக்களைப் பொறுத்தவரை போராடினால்தான் வாழ்வுண்டு. நாம் இணைந்து போராடி எம்மையும் எமது குடும்பத்தவர்களையும் எமது ஊர்களையும் பாதுகாப்போம்.

(வி)

## பாகிஸ்தானில் இன்று பொதுத் தேர்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில் முன்னாள் பிரதமர்களான பெனசிர் பூட்டோ, ஜனாப் நவாஸ் ஷெரீப் ஆகியோர்களும் போட்டியை எதிர்நோக்குவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் இப்பொதுத் தேர்தலானது இருவருக்குமே இக்கட்டானதாகும் என்றும் சோதிட ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-வி)

## வெடிபொருளை பரிசோதித்த நால்வர் காயமடைந்தனர்

(சாவகச்சேரி)

கச்சாய் துறைமுகப்பகுதியில் விமானப் படையினரால் வீசப்பட்ட எறிகுண்டுச்சிதறல்களின் மத்தியிலிருந்த பின் ஒன்றை எடுத்து பரிசோதிக்க முயன்றபோது அது வெடித்ததனால் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் கச்சாயைச் சேர்ந்த சகோதரர்களான திரு கிருஷ்ணராசா ரஞ்சித் (23 வயது), திறலிஸ் (22 வயது), நிச்சாம் நிக்சன் (14 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்களோடு இருந்த ஜோன் கொலின் (22 வயது, கச்சாய்) வெடிகுண்டுபுகையை சுவாசித்தமையால் தொடர்ந்து வருத்தநிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (155-வி)

## தென்மராட்சிப் பகுதி வழமைக்குத் திரும்புகிறது

(சாவகச்சேரி)

புலோப்பளை, அல்லிப்பளை பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ்பெற்று பழைய நிலைகளுக்கு திரும்பியதையடுத்தும் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்தும் தென்மராட்சியில் நேற்று சனநடமாட்டம் அதிகரித்திருந்தது.

சென்றவாரம் முதல் நேற்று முன்தினம்வரை தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த விமானத்தாக்குதல் எதுவும் நேற்று நடைபெறவில்லை விமான நடமாட்டங்கள் வழமையைவிட சற்றுக்குறைவாகவே காணப்பட்டது. கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதியிலிருந்துஇடம்பெயர்ந்தோர் ஒருவாரத்தின் பின் மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்குதிரும்பிக்கொண்டிருந்தனர் எனினும் பளை, எழுதுமட்டுவாள், மிருசுவில் கெற்பெலி, கிளாலி பகுதியிலுள்ளோர் குறைந்தளவு தொகையினரே தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். (155-வி)

## யாழ். குடா எங்கும் ஆசிரியர் தின விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று 6-ம் திகதி யாழ். குடாவெங்கும் கல்விக் கோட்ட ரீதியாக மேற்படி தினத்தைக் கொண்டாடுவதற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

வடமராட்சிக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், வேலணைக் கல்விக் கோட்டம் மற்றும் தென்மராட்சி, வலிகாமம் பகுதிகள் ஈறாக இத்தினம் மிகச்சிறப்பாகக்கொண்டாடப்படவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. துரைசிங்கம் தலைமையில் ஆசிரிய தினம் நடைபெறும்.

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் வட-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. செல்லத்துரை தலைமை வகிப்பார்.

வேலணைக் கல்விக் கோட்டம் நடாத்தும் விழா சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியில் வேலணை கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

மேலும் யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் ஆசிரியர் தின விழா நடைபெறவுள்ளது. (52-75-101-க-வி)

### அரசுக்கு எதிராக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அத்துடன் காணாமல்போன இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரமும் வெளியிட வேண்டும் என்பதே இந்த ஆர்ப்பாட்டம் செய்த தாய்மார்களின் முக்கிய கோரிக்கையாகும். (கே-வி)

### ஐரோப்பிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றக் கட்டடத்தில் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதை சந்தித்தார்கள்.

பதினொன்று அங்கத்தவர்களைக் கொண்ட இக்குழுவினர் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் அரசாங்கக் கட்சியையும், எதிர்க்கட்சியையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்தார்கள்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையும் சந்திக்கவுள்ள இக்குழுவினர் இன்று நாட்டை விட்டு புறப்படுவார்கள். (இ)

### மீண்டும் ஒரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பு ஏற்படுவது. தற்போது கிளாலியிலிருந்து முந்திய நிலைக்கு பின்வாங்கிய ராணுவம் மீண்டும் ஒரு தாக்குதலுக்கு முயற்சிக்கலாம்.

ஆனால் அடுத்தமாதம்வடகீழ் பருவமழை ஆரம்பித்துவிடும். எனவே ராணுவத்தினர் புதிய நடவடிக்கையை திட்டமிட்டால் மழைக்கு முன்னர் செய்யவேண்டும் அல்லது சில மாதங்கள் தாமதித்து இந்த நடவடிக்கைகளை புதுப்பிக்க வேண்டிவரும். (கே-வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/Bt